# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064841

1. District : மாவட்டம் திருவண்ணாமலை PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம், திருவண்ணாமலை. Year: ஆண்டு FIR No.: மு.த.அ. எண் 14/2019 Date: நாள் 07.08.2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: by PC (Amendment) Act Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 02.08.2019 காலை சுமார் 11 மணி மற்றும் 03.08.2019
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை பிற்பகல் சுமார் 1 மணி.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.08.2019 Time : நேரம் காலை 07.30 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் ஏரட்டுப்பாளையம் கிராம நூலகம் கணையாபுரம் பஞ்சாயத்து 20 Km தென் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. சம்பத் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அண்ணாமலை
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 54 [illegible] (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் டேங்க் ஆபரேட்டர் மற்றும் கூலி வேலை (g) Address : முகவரி கதவு எண். 202, காமகோத் தெரு, கணையாபுரம் கிராமம், வழுதலங்குணம் அஞ்சல், திருவண்ணாமலை வட்டம் மற்றும் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   எதிரி. திருமதி. அமுதா,
   பஞ்சாயத்து செயலாளர்,
   கணையாபுரம் கிராமம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்படுகிறது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station (signed) 7.8.19
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07. 08. 2019
காலை 09. 30 மணி.

Name: பெயர் G. MYTHILY
Rank: நிலை காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருவண்ணாமலை. No. எண் ……….

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து அனுப்பப்படுகிறது: திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 07.08.2019-ஆம் தேதி காலை 07.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் திரு.சம்பத், த/பெ.அண்ணாமலை, கதவு எண்.202, காமகுளத்தெரு, கனபாபுரம் கிராமம், வழுதலகுணம் அஞ்சல், திருவண்ணாமலை வட்டம் மற்றும் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு உள்ளது. விடுநர் அ.சம்பத், த/பெ அண்ணாமலை, கதவு எண். 202, காமகுளத்தெரு, கனபாபுரம் கிராமம், வழுதலங்குணம் அஞ்சல், திருவண்ணாமலை வட்டம் மற்றும் மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் என் மனைவி மற்றும் மகளுடன் வசித்து வருகிறேன். நான் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய மனைவி பெயர் செல்வராணி, என்னுடைய மூத்த மகள் விஜயலட்சுமி என்பவருக்கு திருமணமாகி மேக்களூர் கிராமத்தில் வசித்து வருகிறார். என்னுடைய இளைய மகள் சங்கீதா என்பவர் பி.எஸ்.ஸி., நர்சிங் முடித்து வீட்டில் இருந்து வருகிறார். எங்கள் ஊரில் எனக்கு சொந்தமாக சுமார் 1 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது, அதில் வேர்க்கடலை பயிர் செய்து வருகிறேன். நான் சுமார் 30 ஆண்டுகாலமாக கனகாபுரம் பஞ்சாயத்தில் டேங்க் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு மாத சம்பளமாக ரூ.2400/- பெற்று வருகிறேன். என்னைப்போல் எங்கள் ஊரைச்சேர்ந்த திரு.நாராயணசாமி மற்றும் திரு.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கனபாபுரம் பஞ்சாயத்தில் டேங்க் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகின்றனர். நான் தற்போது 2019 ஜனவரி மாதம் வரை ஊதியம் பெற்றுள்ளேன். கடந்த பிப்ரவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 6 மாத காலமாக கனபாபுரம் பஞ்சாயத்தில் இருந்து எனக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. இதுசம்மந்தமாக கடந்த மூன்று மாத காலமாக கனபாபுரம் பஞ்சாயத்து செயலாளர் திருமதி.அமுதா அவர்களை அணுகி கேட்ட போது

இப்போது ஊராட்சியில் பணம் இல்லை என்றும், பணம் வந்த பிறகு தருகிறேன் என்று கூறினார். அதன்பிறகு பலமுறை பஞ்சாயத்து செயலாளர் திருமதி.அமுதா அவர்களை போனில் தொடர்பு கொண்டு எனக்கு சேர வேண்டிய சம்பள பாக்கியை கேட்ட போது எல்லாம் சாக்கு போக்கு சொல்லி சம்பளத்தொகையை வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து பெற்று வழங்காமல் காலம் தாழ்த்தி வந்தார். கடந்த 02.08.2019-ஆம் தேதி நான் கனபாபுரம் கிராமத்தில் காளியம்மன் கோயில் அருகில் குடிநீர் குழாய் உடைப்பை சரிசெய்து கொண்டிருந்தபோது சுமார் 11 மணியளவில் அங்கு வந்த பஞ்சாயத்து செயலாளர் திருமதி.அமுதா அவர்களிடம் எனக்கு சேர வேண்டிய 6 மாத கால சம்பள பாக்கி தொகையை பெற்றுத்தருமாறு திரும்பவும் கேட்டேன். அதற்கு அவர் எனக்கு பணம் ரூ.7000/- இலஞ்சமாக கொடுத்தால் உடனடியாக சம்பள தொகை பாக்கியை பெற்றுத்தர ஏற்பாடு செய்கிறேன் என கூறினார். என்னால் அவ்வளவு தொகை கொடுக்க இயலாது பார்த்து குறைத்து சொல்லுங்கள் என்று நான் கெஞ்சி கேட்ட போது கேட்டபடி பணம் கொடுத்தால் தான் அதற்குண்டான ஏற்பாடு செய்ய முடியும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். அதன்பிறகு கடந்த 03.08.2019-ஆம் தேதி பிற்பகல் சுமார் 1 மணியளவில் கனபாபுரம் பஞ்சாயத்துக்குட்பட்ட ரெட்டியார்பாளையம் கிராம நூலகத்திடம் பஞ்சாயத்து செயலாளர் திருமதி.அமுதா அவர்களை சந்தித்து என்னுடைய சம்பள பாக்கி தொகையை கேட்ட போது அதற்கு அவர் நான் ஏற்கனவே கூறியபடி பணம் ரூ.7000/- இலஞ்சமாக கொடுத்தால் தான் சம்பளத்தொகை பெற்றுத்தர முடியும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். எனக்கு இலஞ்சமாக பணம் ரூ.7000/- கொடுக்க விருப்பமில்லாததாலும் அதற்குண்டான வசதி என்னிடம் இல்லாததாலும் எனக்கு சேரவேண்டிய சம்பள பாக்கி தொகையை பெற்றுத்தர என்னிடம் இலஞ்சமாக பணம் ரூ.7000/- கேட்ட கனபாபுரம் பஞ்சாயத்து செயலாளர் திருமதி.அமுதா அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க தெரிந்த நபர் மூலம் தட்டச்சு செய்த புகார் மனுவை இன்று 07.08.2019-ஆம் தேதி காலை 07.30 மணிக்கு

திருவண்ணாமலை காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு வந்து புகார் மனு அளிக்கிறேன். நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd/XXXXX) A.சம்பத்.

Sir,

Received the complaint on 07.08.2019 at 07.30 hrs and a quick verification on the general reputation of the accused officer was made and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also checked and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 07.08.2019 at 08.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.14/2019, u/s 7 (a) of Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to the Hon'ble CJM and Special Judge, TVM and sent the copies to the officers concerned. (Sd/-XXXXX) 07/08/19. G.Mythily, Inspector of Police, V&AC, TVM.

(signature) 7.8.19
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருவண்ணாமலை.